# ලංකාණ්ඩුවේ ගැසට් පත්‍රය

# இலங்கை அரசாங்க வர்த்தமானப் பத்திரிகை

අංක 12,215 — 1960 ඔක්තෝබර් 21 වැනි සිකුරාදා — 21.10.1960

12,215 ம் இலக்கம்—1960 ம் ஆண்டு அக்டோபர் மாதம் 21 ந் திகதி வெள்ளிக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி I: தொகுதி (I)—பொது

[ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாகக் கோவை செய்து வைப்பதற்காக தனித்தனிப் பக்கங்கள் தரப்பட்டுள்ளது.]


| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| மகாதேசாதிபதியின் பிரகடனங்கள் .. .. | — | விலைக்கட்டளைகள் .. .. .. | — |
| மகாதேசாதிபதியின் நியமனங்களும் பிறவும் .. | — | இலங்கை மத்திய வங்கியின் அறிவித்தல்கள் .. | — |
| அரசாங்க அதிகார சபையின் நியமனங்களும் பிறவும் .. | — | இலங்கை அரசாங்கக் கணக்கு விபரங்கள் .. | — |
| நீதாசன சேவை அதிகார சபையின் நியமனங்களும் பிறவும்.. | — | வரவு செல்வுத் திரட்டுக்கள் .. .. | — |
| மற்றைய நியமனங்களும் பிறவும் .. .. | — | அரசாங்கப் பகுதிகளின் நானாவித அறிவித்தல்கள் .. | — |
| பதிவாளர் நியமனங்களும் பிறவும் .. .. | — | மானுமிகளுக்கு அறிவித்தல்கள் .. .. | — |
| அரசாங்க அறிவித்தல்கள் .. .. | 657 | " மதுவரிச் சட்ட " அறிவித்தல்கள் .. .. | — |


## அரசாங்க அறிவித்தல்கள்

### 1950 ம் ஆண்டின் 29 ம் இலக்க விலைக் கட்டுப்பாட்டுச் சட்டம்

1950 ம் ஆண்டின் 29 ம் இலக்க விலைக் கட்டுப்பாட்டுச் சட்டத்தின் 4 ம் பிரிவு 7 ம் உபபிரிவினால் எனக்கு அளிக்கப்பட்ட அதிகாரத்தின் பிரகாரம், கீழ்க்காணும் அட்டவணையிலுள்ள கட்டளை என்னால் அங்கீகரிக்கப்பட்டது என இத்தால் அறிவித்தல் கொடுக்கிறேன்.

ரீ. பீ. இலங்கரத்ன,
வர்த்தக, வியாபார, உணவு, கப்பற் போக்குவரத்து அமைச்சர்.

கொழும்பு,
1960 ம் ஞூ அக்டோபர் மீ 12 ந உ.

அட்டவணை

| கட்டளையிட்ட திகதி | கட்டளையிடுவதற்கு யாரால் அதிகாரம் வழங்கப்பட்டது | கட்டளை எப்பொருளுக்குச் சேர்மதியானது | எவ்வர்த்தமானப் பத்திரிகையில் கட்டளை பிரசுரிக்கப்பட்டது |
|---|---|---|---|
| 7.9.60 .. | உதவி விலைக் கட்டுப்பாட்டதிகாரி (உணவு), மாத்தறைப் பகுதி | ஆட்டிறைச்சியும் மாட்டிறைச்சியும் | 16.9.60 ந் திகதியைக் கொண்ட 12,021 ம் இலக்கம் |

10–487.

---

L. D.–B. 11/48.

### 1941 ம் ஆண்டின் 27 ம் இல. சம்பளச்சபைச் சட்டம்

#### அறிவித்தல்

கறுவாத்தொழிற் சம்பளச்சபை தமக்கு 1941 ம் ஆண்டின் 27 ம் இலக்க சம்பளச்சபைச் சட்டத்தின் 20 ம், 24 ம் பிரிவுகளால் அளிக்கப்பட்ட தத்துவங்களைக் கொண்டு, இதனகத்தேயுள்ள அட்டவணையிற் குறிக்கப்பட்டுள்ள தீர்மானங்களைச் செய்ய உத்தேசிக்கிறதென, 1943 ம் ஆண்டின் 40 ம் இலக்க சட்டத்தாலும், 1953 ம் ஆண்டின் 5 ம் இலக்கச் சட்டத்தாலும் திருத்தியமைக்கப்பட்ட மேற்கூறிய சட்டத்தின் 26 A ம் பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் இத்தால் அறிவிக்கிறது.

உத்தேசிக்கப்பட்டுள்ள தீர்மானங்களுக்கு ஆட்சேபனைகள் 1960 ம் ஆண்டு கார்த்திகை மாதம் 15 ந் தேதியன்று பகல் 12 மணிவரைக்கும் சபைத்தலைவரால் ஏற்றுக்கொள்ளப்படும்.

அத்தகைய ஆட்சேபனை ஒவ்வொன்றும் எழுத்திற் தெரிவிக்கப்படுவதோடு, அவ்விதம் ஆட்சேபித்தற்கான காரணங்களைக்கூறும் ஓர் அறிக்கையைக் கொண்டதாயுமிருத்தல் வேண்டும்.

சா. ப. குமாரசிங்க,
கறுவாத்தொழிற் சம்பளச்சபைத் தலைவர்.

கொழும்பு,
1960 ம் ஞூ ஐப்பசி மீ 12 ந உ.

அட்டவணை

I ம் பாகம்

சாதாரண வேலைநாள் என்பதன் சொற்பொருள் விளக்கம் (24 ம் பிரிவு). இதனகத்தேயுள்ள III ம் பாகத்திற் குறிக்கப்பட்டுள்ள வேலையாளருக்குப் பொருந்தும் சாதாரண வேலைநாட்கொண்ட மணித்தியாலங்களின் தொகை (சாப்பாட்டுக்கு 1 மணிநேரமுட்பட) ஒன்பதாகும்.

II ம் பாகம்

துண்டுவேலைக்குக் கிழெல்லைச் சம்பளவீதம்

(செடிகளிலிருந்து தடிகள் வெட்டுதல், தடிகள் வெட்டுதலும் தோலுரிசாலைக்கு எடுத்துச் செல்லுதலும், பட்டையின் வெளித்தோலைச் சுரண்டியெடுத்தல், தடிகளின் தோலை உரித்தல், பட்டைகளைச் சுருள்களாக்குதல், சுருள்களை அடுக்குதலும் கட்டாக்குதலும் ஆகியன உட்பட) கறுவா உரித்தலில் ஈடுபடும் வேலையாளருக்குத் துண்டுவேலைக் குரிய கிழெல்லைச் சம்பளவீதம் உரிக்கப்படும் ஒவ்வொரு இறுத்தல் கறுவாவுக்கும் 75 சதமாகும்.

III ம் பாகம்

நேரவேலைக்குக் கிழெல்லைச் சம்பளவீதம்

1 ம் பந்தியிற் குறிக்கப்பட்டுள்ள வேலையாளருக்குப் பொருந்தும் நேரவேலைக்குரிய கிழெல்லைச் சம்பளவீதங்கள் 2 ம் பத்தியில் அவ்வவ்வேலைக்கெதிரே குறிக்கப்பட்டுள்ள வீதங்களாகும்.

| 1 ம் பத்தி வேலையாளரின் வகுப்பு | 2 ம் பத்தி வீதம் |
|---|---|
| பின்வருவனவற்றில் ஈடுபடும் வேலையாளர் : கிளைகளை வெட்டுதல் | ஒவ்வொரு சாதாரண வேலைநாளுக்கும் ரூ. 3.50 |
| கான்வெட்டுதலும், படி கட்டுதலும் | ஒவ்வொரு சாதாரண வேலைநாளுக்கும் ரூ. 3.00 |
| களை பிடுங்குதலும், இலுக்குப் புல்லை அகற்றுதலும், எல்லைகளைத் துப்புரவு செய்தலும் : | |
| (அ) ஓர் ஆண் தொழிலாளருக்கு | ஒவ்வொரு சாதாரண வேலைநாளுக்கும் ரூ. 2.50 |
| (ஆ) ஒரு பெண்தொழிலாளருக்கு | ஒவ்வொரு சாதாரண வேலைநாளுக்கும் ரூ. 2.00 |

### IV ம் பாகம்

### மேலதிக நேர வீதம்

ஒரு சாதாரண வேலை நாள் கொண்ட மணித்தியாலங்களின் தொகைக்கு மேலதிகமாகச் செய்யும் ஒவ்வொரு மணித்தியால வேலைக்குமுரிய கீழெல்லை மேலதிக நேரவீதம் (கீழெல்லை நாளாந்தர வீதத்தை 8 ஆற் பிரிக்கவரும்) கீழெல்லை மணித்தியால வீதத்தை 100 க்கு 50 வீதம் அதிகரிக்கவருந் தொகையாகும்.

10–483.

---

### 1950 ம் ஆண்டின் 25 ம் இலக்க உணவுக் கட்டுப்பாட்டுச் சட்டம்

### கட்டளை இலக்கம் 156

1950 ம் ஆண்டின் 25 ம் இலக்க உணவுக் கட்டுப்பாட்டுச் சட்டத்தின் 4 (1) (i) ம் பிரிவினுல் எனக்கு அளிக்கப்பட்ட அதிகாரத்தின் பிரகாரம் டிக்கிரி பண்டார இலங்கரத்ன, வர்த்தக, வியாபார, உணவு, கப்பற் போக்குவரத்து அமைச்சர் ஆகிய யான் இக்கட்டளையால் எத்தொகையான உள்நாட்டில் பயிர்செய்யப்பட்ட செத்தல் மிளகாயை, இலங்கையின் எப்பாகத்திலிருந்தோ யாழ்ப்பாணக் குடாநாட்டிற்குள், உணவுக் கட்டுப் பாட்டதிகாரியிடமிருந்தோ அல்லது எப்பரிபாலன மாவட்டத்தினதோ பிரதி உணவுக் கட்டுப்பாட்டதிகாரியிடமிருந்தோ பெறும் உத்தரவின் பேரில் தவிர கொண்டு செல்லவோ அல்லது எடுத்துச் செல்லவோ கூடாது எனத் தடை விதிக்கிறேன்.

இக்கட்டளையின் பொருட்டு "யாழ்ப்பாணக் குடாநாடு" என்பது பூனகரிப் பிரிவின் வருமானக் காரியஸ்தரின் பகுதியும், கராச்சி–துணுக்காய்ப் பிரிவின் வருமானக் காரியஸ்தரின் பகுதியும் தவிர்ந்த யாழ்ப்பாண பரிபாலன மாவட்டமாகும்.

12.8.60 ந் திகதி வெளிவந்த 12,182 ம் இலக்க இலங்கை அரசாங்க வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமான 3.8.60. என்னும் திகதியைக் கொண்ட 151 ம் இலக்கக் கட்டளையை எடுத்துவிடுகிறேன்.

டி. பி. இலங்கரத்ன,
வர்த்தக, வியாபார, உணவு, கப்பற்
போக்குவரத்து அமைச்சர்.

கொழும்பு,
1960 ம் ஆண்டு ஐப்பசி மாதம் 11 ந் திகதி.

10–471.

---

# நானாவித அறிவித்தல்கள்

### இலங்கை அரசாங்கப் புகையிரதப் பகுதி

### புகையிரதக் கடவைத் திருத்தங்கள்

கிளிநொச்சி, பரந்தன் ஆகிய இரு புகையிரத நிலையங்களுக்குமிடையில் 205 மைல், 42 சங்கிலியில் சந்திக்கும் கண்டி—யாழ்ப்பாண வீதியிலிருந்து கிளிநொச்சிப் பழைய குடியிருப்புக்குச்செல்லும் வீதியிலுள்ள புகையிரதக் கடவை 22–10–60 சனிக்கிழமை மாலை 5–30 மணிதொடக்கம் 23–10–60 ஞாயிற்றுக்கிழமை காலை 10–00 மணி வரை திருத்தப்படும். இக்கடவை 22.10.60 சனிக்கிழமை மாலை 10.00 மணி தொடக்கம் 23.10.60 ஞாயிற்றுக்கிழமை காலை 4.00 மணி வரை வாகனப்போக்குவரத்திற்கு முழுவதும் மூடப்பட்டிருக்கும்.

முழுவதும் மூடப்பட்டிருக்கும் காலத்தில் வாகனப் போக்குவரத்து யாவும் 206 மைல், 12 சங்கிலி (கரடிப் போக்கு) யிலுள்ள புகையிரதக் கடவையால் நடைபெறலாம்.

10–585.

இலங்கை அரசாங்க அச்சகத்திற் பதிப்பிக்கப்பெற்றது